**சார்பு நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை : திரு.ஈ.முத்துசாமி பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, குளித்தலை.**

**2025–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17–ஆம் தேதி புதன்கிழமை**

**இ.ம.எண்.1/2025 இன் அ.வ.எண்.255/2022**

1. நாகமணி
2. தியாகராஜன் ... மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

/எதிர் /

ஈஸ்வரன் ... எதிர்மனுதாரர்/ வாதி

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் இம்மனு கட்டளை 18 விதி 17 சி.பி.சி.–ன் படி வா.சா.1 சாட்சியத்தை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதியளித்து உத்தரவு பிறப்பிக்கக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மனு தாக்கல் செய்த நாள் | : | 08.10.2025 |
| இறுதி விசாரணை நடைபெற்ற நாள் | : | 05.11.2025 |
| உத்தரவு பகரப்பட்ட நாள் | : | 17.12.2025 |
| மனுதாரர்களுக்காக | : | திரு.K.மாரியப்பன் – வழக்கறிஞர் |
| எதிர்மனுதாரருக்காக | : | திரு.R.கிருஷ்ணசாமி – வழக்கறிஞர் |

**1) மனுவின் சுருக்கம் :–**

இம்மனுவின் மனுதாரர் மீது எதிர்மனுதாரர் பொய்யான ஆவணங்களை தயார் செய்து, அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்த நிலையில், கடந்த 24.09.2025–ம் தேதி அன்று எதிர்மனுதாரர்/வாதியை வா.சா.1–ஆக குறுக்கு விசாரணை செய்யப்பட்டிருந்த நிலையில், மேற்படி மனுதாரர் தரப்பில் வருவாய்த்துறை ஆவணங்கள் கிடைக்கபெறவில்லை என்பதாலும், மேற்படி ஆவணங்கள் தற்பொழுது தான் கிடைக்க பெற்றதாலும், அதனை பொறுத்து மனுதாரர்/வாதியை குறுக்கு

விசாரணை செய்ய வேண்டியது அவசியமாக உள்ளதால், வா.சா.1–ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :–**

மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. மனுதாரர் தரப்பில் என்ன ஆதரவுகள் தாக்கல் செய்ய போகிறார்கள் என்கின்ற விவரத்தை மனு அபிடவிட்டில் கூறவில்லை. மேலும், ஆதரவுகள் தாக்கல் செய்வதற்கான மனுவும் தாக்கல் செய்யவில்லை. வழக்கு நடவடிக்கையை காலம் தாழ்த்தவே இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால், இம்மனுவை எதிர்மனுதாரர் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கோரியுள்ளார்.

3) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும். இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

4) **தீர்வு :–**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இம்மனுவின் மனுதாரர்/பிரதிவாதியின் மீது எதிர்மனுதாரர்/வாதியால் புரோநோட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி வழக்கில் மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு எழுவினாக்கள் வனையப்பட்டு, எதிர்மனுதாரர்/வாதியை வா.சா.1 ஆக கடந்த 02.06.2025–ம் தேதி அன்று முதல் விசாரணை செய்யப்பட்டு மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கடந்த 24.09.2025–ம் தேதி அன்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டதற்கு பின்னிட்டு, வருவாய்த்துறை சம்மந்தமான முக்கியமான ஆவணங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதால், அதனை பொறுத்து வா.சா.1–ஐ மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியவையாகவும், நம்பதகுந்ததாகவும் உள்ளது. இம்மனுவினை அனுமதித்தால் எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்பும் ஏற்படபோவதில்லை. இருப்பினும், இம்மனுவினை எதிர்மனுதாரர் செலவுத் தொகையுடன் அனுமதிக்க வேண்டியது நீதியின் பொருட்டும், நியாயத்தின் பொருட்டும் அவசியமாகிறது. எனவே, இம்மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில்

கொண்டு, இம்மனுவினை எதிர்மனுதாரர் செலவுத் தொகையுடன் அனுமதிக்கலாம் என முடிவு செய்யப்படுகிறது.

5) **முடிவாக,** இம்மனுவின் மனுதாரர் மனு செலவுத் தொகையாக ரூ.500/-ஐ வருகின்ற 27.01.2026-ம் தேதிக்குள் எதிர்மனுதாரருக்கு நேரடியாக செலுத்த வேண்டும் எனவும், தவறும்பட்சத்தில் இம்மனு தாமாகவே தள்ளுபடி ஆகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது. **அழைக்க வாய்தா : 28.01.2026.**

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
DN: cn=MUTHUSAMY ESWARAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.12.17 18:09:51 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் :-** இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் :-** இல்லை

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
DN: cn=MUTHUSAMY ESWARAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.12.17 18:09:55 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.